விலை ரூபா 1-25
யாழ்ப்பாணம்

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 31 ஷஃபா 22 இதழ் 92
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-5-1985

## இலங்கை இனப்பிரச்னைத்தீர்வு: ரஜீவ் நம்பிக்கை

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வு காண முடியுமென்ற நம்பிக்கை இருப்பதாகப் பிரதமர் ரஜீவ் காந்தி தம்மிடம் தெரிவித்ததாகத் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி நிருபர்கள் மத்தியில் சென்னையில் தெரிவித்தார்.

மாநிலக்கட்சித் தலைவர்களுடன் தாம் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரஜீவ் காந்தியைப் புதுடில்லியில் சந்தித்து இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அப்போதே பிரதமர் இவ்வாறு தம்மிடம் கூறியதாகவும் திரு. பழனியாண்டி தெரிவித்தார்.

மேலும் இலங்கை நிலைமை (...) திரு. ரஜீவ் காந்தி ஆழ்ந்த கவலை தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய பி. டி. ஐ. நிருபர் திரு. கிருஷன் ஆனந் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளமைக்குப் பலத்த கண்டனம் தெரிவித்த திரு. பழனியாண்டி, அந்த நிருபருக்கு எதிரான வழக்கு வாபஸ் பெறப்படல்வேண்டும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார். (ரா)

# வல்வை சம்பவங்களைக் கேட்டு பிரிகேடியர் வனசிங்கா அதிர்ச்சி!

## உடன்விசாரணை நடத்துவதாக பிரஜைகள் குழுவுக்கு உறுதி

(யாழ்ப்பாணம்)

**முன்னர் எப்பொழுதும் ஏற்பட்டிராத முறையில் வல்வெட்டித்துறையில் நடந்த தாக்குதல்கள், கொள்ளைகள், கொலைகள்பற்றிக் கேட்டறிந்த யாழ் மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் வனசிங்கா பெரும் அதிர்ச்சியடைந்தார்!**

இதுபற்றி உடனடியாக விசாரணைசெய்து பதற்ற நிலையைத் தணிக்க நடவடிக்கை எடுப்பதாகத் தம்மைச் சந்தித்த வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினரிடம் அவர் நேற்று உறுதியளித்தார்.

வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கே. சிவத்தம்பி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் பற்றி பிரிகேடியருக்கு நேரில் எடுத்துக் கூறுவதற்காக வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கே. சிவத்தம்பி, உபதலைவர் திரு. ச. செல்வேந்திரா, செயலாளர் திரு. எஸ். குமாரசாமி, பொருளாளர் திரு கே முருகமூர்த்தி ஆகியோர் சென்றிருந்தனர் யாழ். மாவட்ட அமைச்சின் இணைச்செயலாளர் திரு எஸ். பி பாலசிங்கமும் சென்றிருந்தார். குருநகர் இராணுவ முகாமில் நேற்றுக் காலை இச்சந்திப்பு நடைபெற்றது.

பொருளாளர் திரு. முருகமூர்த்தி தாம் முகாம்பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டதாகக் கூறி தமக்கு கைமுறிவு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரு வாகனங்கள் நேற்று நண்பகல் விபத்தில் சிக்குண்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவ இடத்தில் டீசல் பவுசர் ஒன்று எரிந்துகொண்டிருப்பதாகவும் சுற்றுவட்டாரத்தில் அசம்பாவிதங்கள் நிகழ்ந்ததாகவும் தெரியவருகிறது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்கள் மிருசுவிலுக்கு வராமல் வேறு பாதையால் யாழ்நகர் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மினிபஸ்கள், லொறிகள் சாவகச்சேரியுடன் திரும்பி விட்டன.

சில பஸ்கள் வேறு பாதையால் பளைக்குச் சென்றதாகவும் தெரியவருகிறது.

பலத்தசத்தத்துடன் நான்கு குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து தொடர்ச்சியாக அப்பகுதியில் வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும் மக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறியதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸ் ஒன்று கடும் சுகவீன முற்றிருந்த நோயாளியை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தபோது வழியில் குண்டு வெடிப்புச் சத்தத்தைத் தொடர்ந்து நோயாளி உயிரிழந்ததாகவும் அம்புலன்ஸ் வேறு பாதையால் யாழ். ஆஸ்பத்திரியை வந்தடைந்ததாகவும் தெரிய வந்தது.

நேற்று நண்பகலுக்கு பின்னர் கொடிகாமத்திற்குப் இ. போ. ச. பஸ் சேவை எதுவும் நடைபெறவில்லை

## நால்வர் கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சில் நேற்று நான்கு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், இவர்களிடமிருந்து பெருமளவான வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (ரா)

## பிரதமர் ரஜீவுக்கு சிவா அவசரத்தந்தி

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் படுகொலைசெய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம் அவசரத் தந்தி ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

"கடந்த 8ம், 9ம் திகதிகளில் தொண்டமானாறுக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் இலங்கை இராணுவத்தினர் பாடசாலைச் சிறுவர்கள் உட்பட 150 அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்துள்ளனர். அன்று முழுவதும் அவர்கள் மேற்கொண்ட பயங்கரத் தாக்குதலை இலங்கை அரசு எந்தவிதத்திலும் தடுக்கவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

## கதிர்காமத்தில் ஒரு ஜெர்மனியரின் அட்டகாசம்!

(கதிர்காமம்)

ஆண்டவன் சந்நிதிக்குள் பலாத்காரமாக உட்புகுந்த வெளி நாட்டு நபரொருவர் அங்கே காணப்பட்ட சூலத்தைப்பிடுங்கி எடுத்துக் கொண்டு கோவில் கூரைமேல் ஏறிக்கொண்டார். இவ்விசித்திர சம்பவம் கதிர்காமம் புனித நகரின் வெளி வீதியிலுள்ள மாரியம்மன் கோவிலில் நடந்தது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த அந்நபர் சில மணி நேரம் வெளியில் இருந்து அம்பாளை வணங்கிக் கொண்டிருந்ததாகவும் பின்பு திடீரெனக் கோவின் உள்மண்டபத்துள் நுழையவே பூசகர் அவரைத் தடுத்து நிறுத்த முயற்சித்

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ நாயன்மார்கட்டில் ஆயுள்வேத மூலிகைகள் தீவைத்துச் சேதம்!

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலையின் பெறுமதிமிக்க மூலிகைச்செடிகள் இனந்தெரியாதவர்களால் தீவைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

சுமார் 300 மூலிகை மரங்களும், செடிகளும் சேதமானவற்றில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இம்மரங்கள் மிக அரிதான மூலிகைகளாகும். நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலையின் ஸ்தாபகர்களால் பல ஆண்டுகளுக்கு முன்னர் இவை நாட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

வடபகுதியின் ஆயுர்வேத வைத்திய தேவைகளுக்கு இவ்வைத்தியசாலை வளவிலிருந்த மூலிகை மரங்களும் பெருமளவில் உபயோகப்பட்டன என்று இவ்வைத்தியசாலை டாக்டர் உமாகாந்தன் தெரிவித்தார்.

## 'யாழ்தேவி' யாழ். வந்தால் டிக்கட் ஸ்ரேடியத்தில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு 'யாழ். தேவி' வரும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும், எப்போது வரும் என்பது இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணத்திற்கு 'யாழ். தேவி' வரும் பட்சத்தில் டிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு: இலங்கை மனமாற்றம்!

### ஹமீத் கலந்துகொள்ளமாட்டார்

(கொழும்பு)

தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு மாநாட்டில் இலங்கை கலந்து கொள்ளும்.

ஆயினு மாநாட்டில்இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி எஸ். ஹமீட் கலந்து கொள்ளமாட்டார். திரு. எட்மன்ட் விக்கிரமசிங்க, புதுடில்லியில் இலங்கையின் தூதுவரான திரு பெர்னட் திலகரத்ன ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்தியத் துணை வெளிவிவகார அமைச்சர் திரு, ஆலம்கான் இலங்கை இனப்பிரச்னை பற்றிக் கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் இம்மாநாட்டில் இலங்கை கலந்துகொள்வதில்லை என்று முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தியும், பாகிஸ்தான் ஜனாதிபதி ஜென

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட யாழ்தேவி பிற்பகல் 3-30 மணிக்கு பளைக்கு வந்துசேர்ந்தது. 4-45 மணிக்கு அது கொழும்பு திரும்பியது.

# அரி ளம்பரம்


## விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட முளைத்திறன் கூடிய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. விலைமலிவு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 107, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 3191

## விற்பனைக்கு

யாழ். இந்து, இந்து மகளிர் கல்லூரிகளுக்கு மிக அண்மையில் அமைதியான பாதுகாப்பான சூழலில் உள்ள சகலவசதிகளும் கொண்ட 2½ பரப்பிலுள்ள பெரிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. இல. 144/3, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3223

உ
சிவமயம்

### கைதடி
### மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை

ஷை குருபூசை 19-05-85 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிமுதல் அவர்களின் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

அடியார்கள்

3205

JAFFNA COLLEGE
### English Medium Classes

Advanced Level and Ordinary Level of London and A E B Classes will commence [on] Monday 3rd June, 1985. You Should meet the Principal for further details and application forms.

PRINCIPAL

Jaffna College,
Vaddukoddai. 3235

இலங்கை இந்திய மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யு முகமாக, சென்னை மாநகரத்தில் மவுண்ட் ரோட், ஜெமினி சதுக்கம் (அண்ணா மேம்பாலம் அருகில்) அமைந்த

### "யாழ்ப்பாண இல்லம்"

அசைவ உணவகத்தைத் திறந்து முற்றிலும் இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை பரிமாற இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

உரிமையாளர்

**யாழ்ப்பாண இல்லம்,**
**பார்சன்கொமோசல் கொம்பிளெக்ஸ்**
**ஜெமினி சதுக்கம்,**
**121, மவுண்ட் ரோட்,**
**சென்னை 6.**

3239


## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி பூலோகநாயகி வரதரட்ணராசா
(MRS. A. V. RATNARAJAH)

உதயம்: 08-01-1912 அஸ்தமனம்: 24-04-1984



அம்மா,

உன் பசுமையான நினைவுகள் எம நெஞ்சத்திரையில் நிழற்படமாக நிகழ்கின்றனவே.

ஆன்மா அழிவதில்லை; மும்மையும் புகழ் பரப்ப ஐவரை ஈன்றவள் நீ. இன்று வீடு பேறுற்றாய்.

அன்று தெய்வமாய் ஒளி வீசினாய்! இன்று தெய்வமாய் ஒளி வீசுகிறாய்!

உனது ஆத்ம சாந்திக்காக இறைவனை
என்றும் வேண்டி நிற்கும்
அன்பு உள்ளங்கள்
புதல்வர், மருகர், பேரர்.

"அன்பு நிலையம்",
கே. கே எஸ் வீதி.
கொக்குவில்.
13-05-1985

3212


## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், T.V. Deck, மோட்டார் சைக்கிள், மின்சார பாவனைப் பொருட்கள், உடை வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- நா. ஸ்ரீதரன், 'கிருஷ்ண வாசம்' புளியங்கண்டுப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மை. 3241

## வாடகைக்கு

ஒரு அறையும் குசினியும் (Annex) மின் இணைப்பும், கிணறும் வாடகைக்கு உண்டு. தொடர்பு; 12 A 5-ம் குறுக்கு ரோட், யாழ்ப்பாணம். 3233


## பத்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி

தம்பிப்பிள்ளை அவர்களின் ஏக புத்திரன்

### தெய்வேந்திரக் குமாரசாமி

(முன்னாள் நில அளவையாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்)



மலர்வு:
12-09-1928

உதிர்வு:
13-05-1975

அன்பொடு பழகிப் பண்புடன் வாழ்ந்து உயரிய சைவசமயியாக
ஆலயத் தொண்டுகள் புரிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
பரம்பொருளின் திருவடி சேர்ந்து பத்தாண்டுகள் நிறைவெய்தியுள்ள
இவ்வேளையில் பாங்கான இல்லற வாழ்வின் பண்பான நினைவுகள்
நெஞ்சைவிட்டு நீங்குவதில்லை நிழல்படத்தின் மலரடிக்கு மலர் சூட்டி
சாந்திக்காக என்றும் அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினர்

முதலியார் வளவு,
கோப்பாய். (3243)

## 2-வது ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணகம்
10-11-1917

விண்ணகம்
13-05-1983

### அமரர் செல்லையா வேலுப்பிள்ளை

சின்னாலடி – காரைநகர்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

எங்கள் அன்பின் திருவுருவே அழியாச் சுடர் விளக்கே ஊரார் போற்ற, உற்றார் வாழ்த்த, உறவினர் மகிழ உத்தமராய் வாழ்ந்த எம் அரும் தலைவா.
கணப்பொழுதும் இன்முகம் மாறாத அன்பில் இணைந்த எம் தந்தையே தமிழுலகம் போற்றும் தொண்டனாய், மக்கள் மறவாத அன்பனாய், நல் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குலவிளக்கே.

நெஞ்சம்மறவாத உங்கள் நினைவுகள் எம்வாழ்வில் என்றும் ஒளி வீசுகின்றன அன்புகலந்த உங்கள் பண்புகள்எம் வாழ்க்கை வழிக்குத் துணையாகின்றன தன்னலமற்ற தங்கள் சேவைகள் எமக்குப் பெருமை கொடுத்து நிற்கின்றன

மக்கள் சேவைக்கே மலர்ந்த உங்கள் பொன்னுடல் எம்மை விட்டகன்றாலும், உங்கள் புகழும், புனிதமும், அறிவும், ஆற்றலும் என்றும் எமக்குத்துணை நிற்கும் தங்கள் ஆத்மா என்றும் சாந்தியடைய, இறைவனடி இணைய தினமும் பிரார்த்திக்கின்றோம்

என்றும் தங்கள் நினைவில் வாழும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்
உறவினர்கள்.

3218


## விற்பனைக்கு

National NV 300 Deck விற்பனைககுஉண்டு தொடர்பு: 'திருத்தணிகை' 122/10 2வது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம. 3242

Hy-Line பேட்டுக் குஞ்சுகள் Hisex பிறவுண் சேவற்குஞ்சுகள் 14ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். 3232

சீயாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு கலவையிலுள்ள சீயாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு. பெக்கட் 5/50 தொடர்புகொள்க. M. G M and Stores, 777, காங்கேசன்துறை வீதி and 208 முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்டூடியோ


## இன்று பாராட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியில் கடந்த 15 ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. வ தம்பையாவுக்கு இன்று திங்கட்கிழமை கல்லூரி ஆசிரியகழகம் சேவை நலம்பாராட்டும் பிரியாவிடையும் அளிக்கின்றது.

விடுதிமண்டபத்தில் கழகத் தலைவர் திரு பொ. நா. நல்லையா தலைமையில் இன்று நண்பகல் நடைபெறும் இவ்வைபவத்தில் பல ஆசிரியர்கள் பாராட்டுரை வழங்குவர்.

## நீறணிந்த பூரண சேவையாளன்



சைவமும் தமிழும் கமழும் திருநெல்வேலியில் சின்னப்பு வைத்திலிங்கம் தம்பதிகளின் ஏகபுதல்வனை திரு தம்பையா ஆசிரியர் கல்வி உலகிற்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

ஒழுக்கமும், சைவப்பண்பும் மிக்க திரு தம்பையாவுக்கு சைவத்தையும் தமிழையும் சீரிய முறையில் ஊட்டியது. திருநெல்வேலி சைவ வித்தியாசாலைக்கு உரியது. இங்குதான் இவர்தம் கல்வியைப் பெற்றார். நல்லாசிரியனாக்கியது பலாலி ஆசிரியர் கலாசாலையாகும் 1953-ஆம் ஆண்டு இக்கலாசாலையின் இறுதித் தேர்வில் சிறப்புச்சித்திபெற்று 1954-இல் இலங்கை கல்விச் சேவையில் ஓர் ஆசிரியனாக முதலில் அநுராதபுரத்தில் ஒரு ஒரு சிங்களப் பாடசாலையில் தமிழ் மாணவர் பகுதிக்குப் பொறுப்பாசிரியராக ஓராண்டு கடமையாற்றி அங்கிருந்து வெலிமடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 7-ஆண்

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நமது இனத்தின் இயற்கையான நியதியே அகிம்சை. பண்படையாத காட்டுமிராண்டிக்கு எப்படி வன்முறை இடல் ானதோ, அதேபோன்று பண்பட்ட மனிதவர்க்கத்துக்கு இயல்பானது அகிம்சை வழி.

— மகாத்மாகாந்தி.

# நமது நோக்கு

## வடமராட்சியில் "வானந்துளங்கிலென்"

அலெக்சாண்டர் நெப்போலியன் முதலிய மேலை நாட்டு வீரர்களை நாமும் பாராட்டும் பழக்கம் மேனாட்டு நாகரிகம் பரப்பிய தீமைகளில் முதன்மையானது.

ஆன்ம வீரம் படைத்த அப்பர் சுவாமிகளின் குரு பூசைத்தினமாகிய இன்று எமது கண்ணுக்கு முன்னே அப்பர் அடிகளின் வழிவந்த காந்தியடிகளைக் கண்டும் நாம் அவர் வழியை பின்பற்றத் தவறியதால் இந்த நிலையில் இருப்பதை தமிழ் மக்கள் அனைவரும் தலைகவிழ்ந்து உணர்ந்து கவலைப் படவேண்டும்.

வெம்படை வந்தபோது அவர்களின் பயங்க உருவங்களையும் படைக்கலங்களையும் கண்டு அப்பர் சிறிதும் அஞ்சவில்லை.

''நாமார்க்குங் குடியல்லோம்'' என்ற தேவாரம் இத் தினத்தில் எந்த தமிழ் சைவ வீடுகளிலும் படிக்கப் படுகிறது; வீரம் கொப்பளிக்கும் அப் பாடல் வெறும் இசையாக கருத்தற்ற சொல் ஓவியமாகவே போய்விட்டது. எங்கள் மரபின் பெருமையை இழந்துவிட்டோம்

மிக அண்மையில் பாரதியார் காலத்தில், இந்த ஆன்மவலி தலையெடுத்திருந்தது. அதனை மீட்க தமிழகத்தார்பெரிதும் உதவினரென்று காந்தியடிகள் போற்றினார்.

பாரதியாரைச் சென்னையில் சந்தித்த மகாத்மா முதற்பார்வையிலேயே ''இவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல; இவரை நன்றாகப் பேணவேண்டும்'' என்று ராஜாஜிக்குச் சொன்னது உண்மைக்கதை.

அப்பரைப்போல் பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்த ஆன்ம வீரம் இப் பாட்டில் தெரிகிறது.

''யார்க்குங் குடியல்லேன்
யான் என்பதோர்ந்தனன்
மாயையே - உன் தன்
போர்க்கஞ்சுவேனோ
பொடியாக்குவேன்
உன்னைமாயையே''

என்று தம்மை அச்சுறுத்திய மாயையைப் பழித்துப்பாடி இருக்கிறார்.

தமிழ் பரப்பும் பணியில் உலகம் புகழும் தனிநாயக அடிகள் தம்பேச்சில், நாவுக்கரசர் நீற்றறையில் துன்புறுத்தப்பட்ட போது பாடிய தேவாரத்தை நினைவு கூர்ந்தார்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்'' என்றதேவாரம் அது. இதனை ஒரு தமிழன் அல்லாது வேறெவரும் பாடியிருக்க முடியாதென்றும், தமிழன் அல்லாத வேறெவரும் முழுமையாக இதனை ரசிக்க முடியாதென்றும் ஆராய்ந்து விளக்கினார்.

தமிழின் இனிமையும் அதற்கு இயல்பான துன்பத்தைத் தாங்கும் சகிப்புத் தன்மையும் அம்மொழியில் வளர்ந்தவரின் சிறப்பு சொத்தென்பது அடிகளாரின் திடமான கருத்து. ஈசன் எல்லோரிக்கும் ஒருவன் என்பதாய் சமயம் சொல்லப்படவில்லை. மொழியின் பெருமையும் அதில் அத்திவாரமான ஆன்மீகப் பெருமையும் விளக்கப்பட்டது.

இன்று நம்மை வருத்தும் தூக்குமேடை யாழ்ப்பாணம் வடமராட்சியாக காட்சியளிக்கிறது, நூற்றுக்கணக்கில் வயோதிபர் பெண்கள் குழந்தைகள் குண்டுக்கும் துப்பாக்கிக்கும் பலியாய் விட்டனர்; இந்த அழிவு சாதனங்களுக்கு அப்பாவி மக்கள் எவ்வாறு ஈடுகொடுப்பது? அரச நீதிக் கிடமுண்டா?

உயிரிழந்தவர்களின் அடையாளம் காணமுடியாத அவலநிலையில் பெற்றோர் எழுப்பும் அவலக் குரல் வானைப் பிளக்குமென்பதில் ஐயமில்லை.

உக்கிரமான போர் ஒன்று நடப்பதாயில்லை. தமிழ் இளைஞர்கள் ராணுவத்தைத்தாக்க, ராணுவம் அப்பாவிமக்களை ஈனமிரக்கமின்றி அழிக்கின்றது. போர்வீரர்களை திருப்பித் தாக்கும் ஆற்றல் அற்றபோது எழும் கோழைத்தனம் இது.

பழிக்குப் பழிவாங்கும் ஈனச்செயலிலும் தகாதவை தவிர்க்கப்பட வேண்டும். பாடசாலைச் சிறார்நிச்சயம் ''பயங்கரவாதிகள்'' அல்ல என்பது ஒருபுறம் மழலைக் குழந்தைகளைக் கொல்ல மனங்கொண்டவர் நாட்டின் இராணுவசேவையை எட்டிப்பார்க்கலாமா? இதற்குப்பொறுப்பான அரசுக்கு என்னகதி?

அரசுக்கும், இச்செயல்களை முற்றாக ஆதரிக்கும் மக்களுக்கும் குழிதோண்டப்படுகிறது கண்கூடு. தமிழினம் அழியாவரம் பெற்றதற்கு ஆதாரம் உண்டு. அதனைப்பேணுவது எமது பெரும் பொறுப்பு.

எங்கள் பிள்ளைகள் இவ்வாறு கொல்லப்பட்டால் அதற்குரியதண்டனை குற்றவாளிகளுக்கு கிடைக்குமென்ற சிந்தனை எமக்கு எவ்வகையிலும் தேற்றம் அளிக்காது.

எங்கள் முன்னோர்அளித்த முதுசொமான ஆன்மபலம் இன்றைய வாழ்வில் குன்றியதால் சமூக சமயப்பற்றால் உண்டாகும் ஒழுக்கம் குன்றியதால் இன்றைய எதிர்பாராத அழிவுக்கு ஆளாகின்றோம் நீதவானும் எதிரியும் ஒருவரென்றால் விசாரணை என்னசெய்யும்?

இந்த அழிவிலிருந்து ஆக்கம் பிறக்கவேண்டுமானால் நாவுக்கரசர்போன்ற ஆன்ம வீரரிடம் புகலிடம் பெறவேண்டும்.

''வானந்துளங்கிலென்
மண்கம்பமாகிலென்
ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட
உத்தமர்க்கே''

தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தெய்வம் ஒன்றே; இத்தெய்வம் உண்டென்றிருப்பவர்க்கு நிகழும் தீமையெல்லாம், வெற்றியில் முடியும்.

உலக அரசியல் அரங்கு

## உலக சமாதானத்துக்கு யுத்த ஆயத்தமே ஒரு வழி என்ற பழைய ஏற்பாடு புதுப்பிக்கப்படுகிறதா?

### வாஷிங்டன்

சூடுகண்ட பூனை அடுப்படியை நாடுகிறது. அமெரிக்காவின் இரண்டாவது வியட்நாம் மத்திய அமெரிக்கா என்று கூறப்படுகிறது:

மத்திய அமெரிக்க நாடுகள் வறுமையிலும் அடிமை வாழ்விலும் பல் ஆண்டுகளாக நலிந்திருக்கின்றன அமெரிக்காவின் அதிகாரச்செருக்குக்கும் சல்வ வாழ்வுக்கும் அடிபணிவதில்லை என்று இன்று சபதம் கொண்டிருக்கின்றன; இதனைவிட ரஷ்யாவின் உதவிபெற்று சோஷலிச அமைப்பை உருவாக்கி ஸ்திரம் பெற்றுவரும் கியூபா வாஷிங்டனுக்கு அடுத்த வீடு.

நிக்கரகுவா, எல்சல்வடோர் போன்ற பின்தங்கிய நாடுகள் ராணுவ ஆட்சியில் நொந்துபோன வேளையில், ஜனநாயக ஆட்சி தலையெடுக்க வேண்டும் என்ற பிரயத்தனத்தில் மக்கள் தலைவர்கள் என்ற கோதாவில், ரஷ்ய, அமெரிக்க உதவிகோருவதால் ஆட்சிமுறைக்குப் போட்டியும் போரும் உண்டாக்கிவருகின்றன.

### நிக்கரகுவா

இந்த மத்திய அமெரிக்க நாட்டின் அரசியல் நிலை நாளுக்குநாள் மாற்றம் காணப்படுகிறது. அங்கு அமைந்திருக்கும் சண்டினிஸ்டா ஆட்சிக்கு எதிராக கெரில்லா யுத்தம் நடைபெறுகிறது. சண்டினிஸ்டா ஒருவகை சோஷலிச அமைப்பை ஏற்படுத்த முயல்கின்றது. ஜனாதிபதி றீகன் கெரில்லாக்களுக்குப் பேராதரவு. அவர்களுக்கு நிதியுதவித் திட்டம் வழங்க காங்கிரசைக் கோரி இருந்தது, அது ஏற்கனவே நிராகரிக்கப்பட்டது. இன்றுநிலைமை மாறிவருகிறது. றீகனும் அவருடைய ராணுவ அதிகாரிகளும் இது குறித்து ஆத்திரப்பட்டவேளையில் நிக்கரக்குவாவின் ஜனாதிபதி ஒற்றேகா மாஸ்கோ சென்று பொருளாதார உதவி கோருகிறார். மாஸ்கோ மிகப் பெரிய அளவுக்கு உதவி அளிக்க முன்வருமென்று நம்பப்படுகிறது.

எனவே றீகனின் முந்திய திட்டம் இன்று காங்கிரஸ் ஆதரவைப் பெற்றிருக்கிறது. ஏற்கனவே பொருளாதார பகிஷ்காரத்தில் வாஷிங்டன் ஈடுபட்டிருக்கிறது அது நிக்கரகுவாவை அசைக்குமென நம்பமுடியாது. வல்லரசுகள் இருவரும் நிக்கரகுவாவில் பலப்பரீட்சை செய்கின்றன.

### பிறேஸில்

பட்டகாலிலே படுமென்பது போல் இன்று வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட பிறேஸில் நீண்டகால வறட்சியில் மக்கள் அவஸ்த்தைப்பட்டனர். கடந்த ஆறுவாரகாலம் இடைவிடாது பெய்தமழையால் பலநகரங்கள் மூழ்கியிருக்கின்றன. 10 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இயற்கையின் சீற்றத்துக்கு மேல் தெய்வத்தின் தண்டனையே இந்நாட்டின் மக்களால் நேசிக்கப்பட்ட ஜனாதிபதி தங்கிட்டோ நீவ்ஸ் தெரிவு செய்யப்பட்டதும் காலமானார். அவரது மரணச் சடங்கில் பெருக்கெடுத்த மக்கள் வெள்ளத்தில் உயிரிழந்தவர் பலர். அவருக்குப் பின்வந்த இன்றைய ஜனாதிபதி ஜோஸ் சார்னி நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமையை சாதுர்யமாகச் சமாளிப்பாரா என்பது சந்தேகம்.

பிறேஸிலில் மக்கள் 20 வருடங்களாக இராணுவ ஆட்சியில் வாழ்ந்து வந்தனர். ஒரு திறமை படைத்த தன்னலமற்ற தலைவர் தங்கள் அடிமை வாழ்வை அகற்றவருகிறாரென்று குதூகலம் தோன்றிய கணமே மறைந்துவிட்டது

புதிய தலைவர் சார்னி ஜனநாயக சோஷலிச கட்சியைச் சேர்ந்தவரானாலும், ராணுவ ஆட்சியுடன் கூட்டுறவுவைத்த கட்சி அதுவாகையால் மக்கள் சந்தேகப்படுகிறார்கள். உண்மையான நிலை அவர் நாட்டின் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு சீர்செய்வாரென்பதில் தெரியவரும். தொழிலிலும், தொழில்நுட்பத் துறைகளிலும் முதற்பத்து நாடுகளில் பிறேஸில் ஒன்று. ஆனால் இன்று நாட்டின் செல்வம் ஒருசிலர் கையில்தான் உண்டு. பணவீக்கம் 220 சதவீதம்; கடன்பழு 10? பில்லியன் டொலர். ஒரு பில்லின்-பத்தாயிரம் லட்சமென்பதை அறிக. நிதிஉதவி பெறுவது இனிமேல் கஷ்டம் மறைந்த தலைவர் நீவ்ஸ் ஐ. எம் எப் அல்லது கடன்வழங்கும் வங்கிகளுக்கு வளைந்துகொடாத நேர்மையாளர்.

இன்றைய நிலையில் இக்கொள்கை தொடரவேண்டும் ஆனால் புதிய மந்திரிசபையில் ஏட்டிக்குப் போட்டியான கொள்கையுடையவர்கள் இருக்கின்றனர்

### நாஸிசம் ஒழிப்பு விழா

ஜனாதிபதி றீகன் மேற்கு ஜெர்மனியுடன் உண்டான உறவை ஜனாதிபதி கோலின் தளிப்பட்ட நட்பைப் பயன்படுத்தி ஆதரிக்க எடுத்த நடவடிக்கை தானொன்றை நினைக்க, தெய்வம்வேறொன்றை நினைத்ததுமாதிரி போய்விட்டது. மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்தபோது அங்கு அடக்கம் பண்ணியிருக்கும் (ஹிட்லரின்) அதிரடிப்படை வீரர் சமாதிக்கு மலர் வளையம் சாத்தியது அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் உள்ள யூதரை

(6 ம் பக்கம் பார்க்க)

இன்று அப்பர் குருபூசை

## அப்பர் காட்டும் இறை நெறி

அப்பர் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்டசெந்தமிழ்ச்செல்வர், சிவானுபூதி பெற்றவர்; சிவன் முத்தர் சிவபெருமான் அவர் பாடலுக்குருகித் 'திருநாவுக்கரசு' என்ற பட்டப் பெயரை அவருக்குச் சூட்டினார். அப்பர் தாம் பெற்ற அரிய பேரின்ப அநுபவங்களைப் பல்லாயிரம் பாடல்களிற் பன்னிப்பன்னிப் பாடியிருக்கிறார். சிவன் அருள் கைவரப் பெறுதவர்க்குச் சிவன் ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் அவனது ஆதி மாண்பும் எப்படித் தெரியும்? அவற்றைத் தெரிந்தவர்கள் சொன்னாலும், நுண்மாண் நுழைபுலம் இல்லர் தெரிந்துகொள்வார்களா? மாட்டார்கள். எதுபோல எனின் கிணற்றிலே வாழ்கின்ற ஆமையைப்போல் என்கிறார் அப்பர்.

ஒருநாள் கடலில் வாழ்கின்ற ஆமையொன்று கிணற்றில் வாழ்கின்ற ஓர் ஆமையைக் காண நேர்ந்தது. சிறிதளவு நீரேயிருக்கின்ற அந்தக் கிணற்றிலே கிடக்கின்ற ஆமையைக்கண்டு கடல் ஆமை இரக்கம்கொண்டது. கிணற்றில் வாழ்கின்ற ஆமைக்கு இடுக்கண் என்றும் உண்டு. கடலில் அப்படியில்லை. கிணற்றைவிடக் கடல் மிகப் பெரிதானதால் ஒருவருக்கும் பிடிகொடாமல் தப்பித்துக் கொள்ளமுடியும். இவ்வாறு நினைத்த கடல் ஆமை கூவல் ஆமையிடம்' கிணற்றைவிடக் கடல் மிகப் பெரியது அங்கு வந்தால் நீ இன்பமுறுவாய்'' என்றது. அதற்குக் கிணற்று ஆமை, ''எங்கள் கிணற்றை

பேராசிரியர்
ஜி. சுப்பிரமணியபிள்ளை

விட உங்கள் கடல் அவ்வளவு பெரிதா? அது எப்படி இருக்க முடியும்? எங்கள் கிணறுதான் கடலைவிட மிகப் பெரியது'' என்று கடல் ஆமையின் சொல்லைத் தட்டிப் பேசியது. கிணற்றைவிட்டுக் கடலுக்குப் போக மறுத்துவிட்டது.

சிற்றின்பமாகிய உலக இன்பத்திலே உழலுகின்றவர்கள் கூவல் ஆமையின் அறிவையே பெற்று இருக்கின்றனர். அவர்கள் பேரின்ப வெள்ளக் கடலுக்குப் பெயர்ந்து செல்ல மறுக்கின்றனர். சிவானுபூதி பெற்ற அப்பர்அடிகள்போன்ற பெரியார்களின் அருள்வாக்குக்களை மனத்துக்கொண்டு சிவநெறியொழுகிச் சிவபிரானது பரத்துவ உண்மையைத் தெளிகின்றார்களில்லை. பற்றினதே பற்றாய்த் துயருகின்றனர். உழுத சால்வழியே இழுதை நெஞ்சு கொண்டு உழுகின்றனர். குறுகிய எண்ணமும் குறிக்கோளுங் கொண்டு குன்றி மாய்கின்றனர். சிவபிரானது தனி முதன்மையையும் தாய்மையையும் அருள்திறனையும் போற்றுவதில்லை பரந்த நோக்குடன் அவர்கள் மனம் பண்படவில்லை கிணற்று ஆமை போல் கீழ்நோக்கியஎண்ணமே மேம்பட்டுநிற்கிறது இவ்வுண்மையை நகைச்சுவையுடன் அருள்வாக்காக அப்பர் அடிகள் எவ்வாறு உருகிப் பாடுகின்றார். பாருங்கள்.

''கூவலாமை
குரைகடலாமையைக்
கூவலோடொக்குமோ கட
லென்றல்போல்
பாவகாரிகள் பார்ப்பரி
தென்பரால்
தேவ தேவன் சிவன்
பெருந் தன்மையே''

அங்கு 'குரைகடல்' என்றதன் கருத்து அறிதற்பாலது. கத்துங்கடலின் சித்தத்தைக் கூடக் கூவல் ஆமை கேட்டுத் தெரிந்துகொள்ள மனம் இல்லாதிருக்கிறதாம். அதேபோல் தேவர்களுக்குத் தேவனாய் விளங்கும் சிவனுடைய சிறப்பியல்புகளைப் புண்ணியவான்கள் எடுத்துக் கூறுவதைக்கேட்டும் உண்மையை உணரும் மனப்பான்மையற்ற காதகர்கள் கூவல் ஆமையைப்போல இருக்கின்றனர். என்றுநொந்து கூறுகிறார் திருநாவுக்கரசர்.

பழிக்குப் பழிவாங்கும் பாங்குடையது வன்செயல். வீரத்தை வெளிக்காட்டும் போதும் இறுதியில் வெற்றி அகிம்சைக்கே என அறிக.

# வடஇந்தியாவை கலக்கிய குண்டுவெடிப்பு சம்பவங்கள்

## 800 பேர் கைது

(புதுடில்லி, மே 12)

**வடஇந்தியாவின் நான்கு மாநிலங்களில் நேற்றும், நேற்று முன்தினமும் சீக்கிய தீவிரவாதிகளினல் மேற்கொள்ளப்பட்ட பயங்கர குண்டுவெடிப்பு சம்பவங்களில் 77 பேர் பலியாகியுள்ளனர், 610 பேர் படுகாயமடைந்தனர்.**

தலைநகர் புதுடில்லியுல் 40 பேரும், உத்தர பிரதேசத்தில் 24 பேரும், ஹரியானுவில் 11 பேரும், ராஜஸ்தானில் 2 பேரும் பலியாகியுள்ளனர்.

புதுடில்லி பாராளுமன்றத்துக்கு அருகே பத்துக் குண்டுகள் நேற்றுக்காலை வைக்கப்பட்டிருந்தபோது அதனைப் பொலிசார் அகற்றிவிட்டனர்.

டிரான்சிஸ்ரர் ரேடியோ பெட்டிகளில் மர்மக் குண்டுகளைப் பொது இடங்கள், வீதிகள், பஸ்கள் போன்ற பயணிகள் நிறைந்த இடங்களில் இந்தத் தீவிரவாதிகள் வைத்தபோது பொதுமக்களும், சிறுவர்களும் அவற்றை எடுத்தபோது இந்தக் குண்டுகள் வெடித்து அவர்கள் பரிதாபமான முறையில் பலியானுர்கள்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து 800 தீவிரவாதிகளை அரசாங்கம் கைதுசெய்துள்ளது.

இதில் 400 பேர் பஞ்சாப் மாநிலத்தில் மாத்திரம் கைதானுர்கள். டில்லியில் 200 பேர் கைதானுர்கள். இவர்கள் மீது பாரதூரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி இச்சம்பவம் தொடர்பாக தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பவர்களை பாரதூரமாகக் கண்டிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

புதுடில்லியில் தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

சீக்கிய தீவிரவாதிகளைத் தேடும் வேட்டையில் இராணுவத்தினர் ஈடுபட்டதோடு பிரதான விமானநிலையங்கள், இந்தியாவின் எல்லைகள் ஆகிய பகுதிகளில்ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் குறித்து மேற்கு வங்காள முதலமைச்சர் திரு: ஜோதிபாசு வெளியிட்டுள்ள அறிக்கையில் வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளும் அவர்களது கையாட்களும் மேற்கொண்ட சதிமுயற்சி இதுவாகும் என்று கூறியுள்ளார்.

பல சீக்கியக் குருமாரும் இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களைக் கண்டித்துள்ளனர்.

'அகாலிதள்' கட்சியின் மூத்த உறுப்பினர்களான முன்னுள் பஞ்சாப் முதலமைச்சர் பிரகாசிங் பாதல், பல்வந்தசிங் ராமவாலியா, பல்வந்தசிங் ஆகியோர் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

# இங்கிலாந்தில் பெரும் தீவிபத்து: 4பேர் கருகி மாண்டனர்! 200 பேர் படுகாயம்!!

லண்டன், மே 12

வட இங்கிலாந்திலுள்ள 'பிராக்போட்' நகரில் உதைபந்தாட்ட ஸ்ரேடியம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 40 பேர் கருகி மாண்டனர்.

200 பேர் படுகாயமடைந்தனர்.

40 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

இந்த ஸ்ரேடியத்தில் உதைபந்தாட்டப்போட்டி நடந்து கொண்டிருந்தபோதே தீ மூண்டதாம்.

போட்டியை ஒளிபரப்பிக் கொண்டிருந்த தொலைக்காட்சியில் தீ பரவிய சம்பவத்தினுல் மக்கள் ஓடிய காட்சியும் தெரிந்ததினுல் இத் தீ விபத்தினை இங்கிலாந்து மக்கள் அனைவரும் தொலைக்காட்சியில் பார்க்கக்கூடியதாக இருந்தது.

# இலங்கையில் மனித உரிமைமீறப்படுகிறது

## தமிழக பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

சென்னை, மே. 10

''இலங்கையில் மனித உரிமை மீறியுள்ளமை பத்திரிகையாளர் கிஷ்னன் ஆனந் கைது அம்பலமாக்கியுள்ளதென்று தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு ஜோசப் மடப்பள்ளி தெரிவித்துள்ளார்.

கிஷ்னன் ஆனந்த் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து இலங்கை அரசுக்கு இந்தியா, தனது கடுமையான ஆட்சேபத்தை தெரிவிக்கவேண்டுமென்று விடுதலைப் பத்திரிகை ஆசிரியர் திரு. வீரமணி இந்திய அரசை வேண்டியுள்ளார்.

இது ஜனநாயக நெறிகளை மீறிய ஒரு செயலாகும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் திரு. மது தண்டவதே கூறியுள்ளார்.

இச் செயல் இந்தியாவை ஆத்திரமூட்டும் செயல் என்று பி.ரி.ஐ. தலைவர் திரு. கல்யாணம் தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் இயக்கம்: இந்தியா பாராமுகம்!

## அமைச்சர் காளிமுத்து கவலை

(சென்னை)

பாலஸ்தின விடுதலை இயக்கம், தென்மேற்காசிய விடுதலை தாபனம் (சுவாப்போ) ஆகிய விடுதலை இயக்கங்களை அங்கீகரித்து இருக்கும் இந்திய அரசாங்கம் இலங்கைத்தமிழர் விடுதலை இயக்கங்கள் விவகாரத்தில் பாராமுகமாக இருந்துவருவது பெரும் விந்தையாக இருந்துவருகிறது'' என்றுதமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.காளிமுத்து கவலைதெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

''இந்திய அரசாங்கத்தின் இந்தப்பாராமுகமான செயல்பசியால்வாடும் தமது தாயாரை புறக்கணித்துவிட்டு எங்கோ இருக்கும் ஒரு உறவினருக்கு அதிக பால்தரும்பசுவொன்றை தானம்செய்யும் ஒரு கொடை வள்ளலின் மகனின் செயலுக்கு ஒப்பானது'' என்று தெரிவித்தார்.

# போபாலில் அங்கவீனமான குழந்தைகள் பிறக்கவில்லை

(போபால்)

போபால் இரசாயனத் தொழிற்சாலையில் கடந்த டிசம்பர் மாதம் நச்சுவாயு வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அங்கவீனமான குழந்தைகள் பிறந்துள்ளன என்று வெளிவந்த செய்திக்கு இந்திய மத்திய மாநில அரசாங்கம் மறுப்புத் தெரிதுள்ளது.

இதற்குமுன்னர் மாநில அரசாங்கத்தின் அதிகாரி ஒருவர் இதனுல் பாதிக்கப்பட்டசுமார் நூறு பெண்கள் அங்கவீனமான குழந்தைகளைப் பெற்றுள்ளார்கள் என்ற செய்தி தவறுனது என்றும் டிசம்பர் மாதத்துக்குப் பின்னர் 1400 பெண்கள் தேகாரோக்கியமான குழந்தைகளை அங்கு பெற்றெடுத்துள்ளார்கள் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் வைத்திய ஆராய்ச்சி பேரவையும் போபாலில் புதிதாகப் பிறந்த பிள்ளைகள் இந்த நச்சுவாயு வெளியேற்றத்தால் பாதிக்கப்படவில்லை என்று அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் போக்கு இந்தியா அதிர்ச்சி

[புதுடில்லி]

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனுப்குர்ஷித்ஆலம்கான் அண்மையில் லோக்சபாவில் தெரிவித்துள்ளகருத்துக்கள் தொடர்பாக இலங்கைஅரசங்கம் அதிகமாக அலட்டிக்கொள்வது குறித்து இந்தியா பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

இதேபோன்று பூட்டானில் நடைபெறவுள்ள தெற்காசிய பிராந்தியஒத்துழைப்புமாநாட்டில் இலங்கை கலந்துகொள்ளாதகுறித்து இந்தியா ஆத்திரம் அடையவில்லை. மாருக அதிர்ச்சியே அடைந்துள்ளதாம்.

# ஐ.நா. செயலாளர் ஹமீத் சந்திப்பு

[வாஷிங்டன்]

ஐ. நா. செயலாளர் நாயகம் திரு. ஜாவியா பிரெஸ்டி கொய்லரை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜனுப் ஏ.ஸி எஸ் ஹமீத் கடந்த வாரம் அமெரிக்காவில் சந்தித்துஇலங்கையின் தற்போதைய நிலை குறித்து விளக்கிக் கூறினுர்.

பூட்டான் மாநாட்டில் வெளியுறவு அமைச்சர் ஏ ஸி எஸ். ஹமீத்தை இந்திய வெளியுறவு அமைச்சர் குர்ஷித்ஆலம்கான் சந்திக்கவிருந்ததாகவும் தற்போது இலங்கை கலந்துகொள்ளாதினுல்நிலைமைமுற்றிலும்மாறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

# "பிராந்திய ஒத்துழைப்பில் [redacted] இருதரப்பு விவகாரங்களை சேர்த்துக் கொள்ளக்கூடாது"

## ரொமேஷ் பண்டாரி கருத்து

[பூட்டான்]

பூட்டானில் நடைபெறவுள்ள தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை கலந்து கொள்ளாதது குறித்து இந்தியா மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளது

இது குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி கருத்து வெளியிடுகையில் ''தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் வெளியுறவு செயலாளர்கள் 1981ம் ஆண்டு இலங்கையில் முதல்முதலாக மாநாட்டை கூட்டியபோது இம் மாநாட்டில் இருதரப்பு விவகாரங்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற தீர்மானத்தை இலங்கைதான் கொண்டுவந்தது. அதனை அப்போது ஏனைய நாடுகள் யாவும் வரவேற்றிருந்தன. இதேபோன்று 1983ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்த அமைப்பின் முக்கிய பிரகடனத்திலும் இருதரப்பு விவகாரங்களை சேர்த்துக்கொள்ளக்கூடாது என்ற தீர்மானமும் முக்கியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது இலங்கை இந்த விதிகளை மீறியது ஒன்றுக்குஒன்று முரணான நடவடிக்கை என்றூர்.

இதேவேளை பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் ஜனுப் சௌத்திரி இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜனுப் ஏ ஸி.எஸ். ஹமீத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பிராந்திய ஒத்துழைப்பில் இருதரப்பு விவகாரங்களை சேர்த்துக்கொள்ளக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையின் இந்த முடிவு குறித்து பூட்டான் மாநாட்டாளர்கள் பெரும் ஆத்திரம் கொண்டுள்ளனர். இந்தியா போன்று பங்களாதேசும் இலங்கையின் முடிவுகுறித்து கவலைகொண்டுள்ளது.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை பங்களாதேஷ் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "இலங்கைத் தமிழ் அகதிகளை: உள்துறை அமைச்சர் நேரில்பார்வையிடவேண்டும்"

## தமிழ்நாடு அரசு கோரிக்கை

[சென்னை]

இராமேஸ்வரம் அகதிகள் முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை உள்துறை அமைச்சர் திரு எஸ். பி சவான் தலைமையிலான குழுவொன்று நேரில் வந்து பார்வையிடவேண்டுமென்று தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் அகதிகள் முகாம்களைப் பார்வையிட்ட பின்னர் நிருபர்கள் மததியில் பேசுகையில் தமிழ்நாடு தலைமைச் செயலாளர் திரு. பி. அன்ரனி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இராமேஸ்வரம்வந்த 80,000 இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 20,000 பேர் தமிழ்நாட்டிலுள்ள 12 மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் ஏனையோர் இராமேஸ்வரத்தில் தங்கியுள்ளார். இவர்களுக்கு இந்திய அரசு 5 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தலைமன்னுர் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக இந்திய அரசு விரைவில் ஒரு முடிவு எடுக்கும்என்று கூறினுர்.

# விறபனை நிலையம் தாக்கப்பட்டது

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள சில சட்டவிரோத கசிப்பு 'விற்பனை நிலையங்கள்' சில தினங்களாக இனந்தெரியாதவர்களால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டன

பொருள்கள் சிதைக்கப்பட்டதாகவும் சிறு கொட்டில்கள் எரிக்கபபட்டதாகவும் அறியப்படுகிறது அங்கிருந்தவர்கள் நையப்புடைக்கப்பட்டார்களாம்.

# வர்த்தகர்கள் கடத்தல்: தொடர்ந்து கடையடைப்பு

## யாழ். வர்த்தகர் சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்படுவதைக் கண்டித்தும், வர்த்தகசங்கத்தலைவர் திரு எஸ் வி முருகேசு கடத்திச்செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தும், தொடர்ந்து கடைகளை பூட்டி பகிஷ்கரிப்பு நடத்த யாழ். வர்த்தக சங்கம், நேற்று முடிவுசெய்துள்ளது.

யாழ். வர்த்தகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

''சகல வர்த்தகர்களும் எது வித பேதமுமின்றி கடைகளைப் பூட்டி பகிஸ்கரிப்பு பூரண வெற்றிபெற ஒத்துழைப்பு வழங்கவேண்டும். வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்படுவது மனிதாபிமானமற்ற செயல் நீதி, நியாயம் இல்லாத செய்கை இதை எந்த மனிதாபிமான சிந்தனையுள்ள நல் இதயம்படைத்த எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அநீதியை எதிர்க்க வர்த்தகர்கள் சிந்தனையோடு ஒன்றுபட வேண்டும். வர்த்தகர்களை கேலிக்குரிய வகையிலும் மாசு கற்பிக்கும் முறையிலும் பண்பாடற்று கடத்திச்சென்று தடுத்துவைப்பதை எந்தஅறிவு படைத்த வர்த்தகரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றே சங்கம் நம்புகிறது. ஆகவே சகல வர்த்தகர்களும் ஒற்றுமையான கட்டுககோப்போடு நிலைமையை உணர்ந்து பூரண பகிஸ்கரிப்பு செய்து ஒற்றுமையை நிலைநாட்டுவது மிக மிக முக்கியமானது. இதை ஒவ்வொரு வர்த்தகரும் உணர வேண்டும். இன்றைய நிலையில் மக்களின் கஷ்டத்தினை நாம் உணர்கிறோம். நாம் வேதனையோடுதான் பகிஸ்கரிப்பு நடத்துகிறோம். எங்கள் நிலையை நீங்கள் உணரவேண்டும் மிகவும் கஷ்டமானநேரத்தில் யாழ். வர்த்தகர்கள் மிகவும் நல்ல முறையில் செயல்பட்டுள்ளார்கள். இன்று கடத்திச் சென்று தடுத்து வைப்பதால் மனம் வெறுப்படைந்து வேதனையோடு வேறுவழி இல்லாது பகிஸ்கரிப்பில் இறங்கியிருக்கின்றனர், வர்த்தகர்களின் மனித உரிமை பறிக்கப்படுவதை நீங்கள் கண்டிக்க வேண்டும், நமது தலைவர் ச வி முருகேசுவை கடத்திச் சென்றவர்கள் எவராக இருந்தாலும் சரி அவரை நிபந்தனை எதுவுமில்லாமல் உடன் விடுதலை செய்ய வேண்டுகிறோம். அவரை உடனடியாக விடுதலை செய்யும் பட்சத்தில் நாம் உடனடியாக பகிஸ்கரிப்பு நடவடிக்கையை கைவிடுவோம். ஆகவே சம்பந்தம்பட்டவர்கள் மக்களின் நன்மை கருதியும் வர்த்தகர்களின் இன்னல்களை நீக்கி அவர்களின் சேவை செயல்பாடுகள் யாவும் முன்போல் இருக்கக்கூடியதாக அவர்களின் குறைகளை நீக்க வேண்டும் வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்படுவது முற்று முழுதாக நிறுத்தப்பட வேண்டும் என்று பாணிவாகவேண்டுகின்றோம்''. (க)


ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்-ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி. ப. 2-00
M. G. R —ஜெயலலிதா
காவல்காரன்

12-5-85 — 13-5-85
4-30 P. M.
DAY OF THE JACKAL
(War Film)

றீகல்
தினசரி 10-30, 2-00
பாண்டியன், ரேவதி
நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்

றீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்)

லிடோ சினிமா
''You dont Assign; You Unleash Him''
Staring
Kenwahl-Alberta Watson
in
''THE SOLDIER''

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
ரஜனிகாந்த் - மாதவி
நடித்த
தில்லு முல்லு
(ஈஸ்மன் கலர்)

வின்ஸர்
தினசரி 10 30, 2-00
4-15
Burt Reynolds
in
BEST FRIENDS
காதலர் இருவர்
வாழ்க்கை மர்மத்தைச்
சித்தரிக்கும் ஓவியம்.

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
தியாகராஜன் - சரிதா
கவுண்டமணி நடித்த
கொம்பேறி மூக்கன்

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
13-5-85 முதல்
Dracula
ரகுலா
சிறந்த நடிப்பும், பாலியல் காட்சியும் நிறைந்தது.
மிகக் கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு பட்டும்.
ஆசனங்களுக்கு முந்துங்கள்.

முருகன் மினி
(இருபாலைச்சந்தி)
தினசரி 10-30, 2-00, 4-30
9 முதல் 10 வரை
கொலுசு
11 முதல் 12 வரை
சுமங்கலி என் சுந்தரி

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30 2-30
எம் ஜி ஆர்-ஜெயலலிதா
நடித்த
சந்திரோதயம்

லதா மினி
(கோண்டாவில்)
13 முதல்
ராஜாயுவராஜா
தியாகராஜன்
(இருவேடங்களில்)
ஊர்வசி

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2.30
100 நாட்களுக்குமேல் ஓடி சாதனை காட்டியவீத்த .. சித்திரம்
விதி

...ரான்லி
(சினிமா
10-30 2 30
பாண்டியன் (இருவேடங்கள்
நளினி நடித்த
நிச்சயம
5'X5' திரையில்


## நீறணிந்த...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டுகள் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றினர் அதன்பின்னர் பேராதனையிலுள்ள தமிழ் கலவன் பாடசாலையில் நற்சேவை புரிந்து பின்னர் அவரது சொந்த இடத்திலமைந்த செங்குந்தா இந்துக்கல்லூரியில் 7 ஆண்டுகள் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றினர். அன்றைய யாழ் இந்துக்கல்லூரியின் அதிபரின் வேண்டுகோளின் பேரிலும் தனது சொந்த விருப்பத்தின்பேரிலும் யாழ் இந்துக் கல்லூரிக்குச் சேவையாற்றவந்தார். பழைய பாடசாலை மாணவர்கள் இவரது சேவை தங்கள் கல்லூரிக்குத் தேவை என இவ்விட மாற்றத்திற்கு எதிர்ப்புத தெரிவித்தனர். திரு தம்மையா கல்வியதிகாரிகளோடு அக்கல்லூரிக்குச் சென்று மாணவர்களை நேரில் சந்தித்து அவர்களைத் திருப்தி செய்தார். அக்கல்லூரியின் இழப்பு யாழ். இந்துக் கல்லூரிக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது தொடர்ந்து யாழ் இந்துக்கல்லூரியிலே தமது வாழ்நாளில் கூடிய காலமான 12 ஆண்டுகள் சேவையாற்றித் தமது அறுபதாவது பிறந்த தினமாகிய 11 05 85 அன்று தனது 31 ஆண்டுகள் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார் இவர் வெகுதந்த இந்துக் கல்லூரி. யாழ் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் சழகங்களின் தலைவராகக் கடமையாற்றியுள்ளார்

இவர் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் இவரது கல்விச் சேவை தொடர்ந்து பல்லாண்டுகள் தமிழ் உலகிற்குக் கிடைக்குமென்பதில் ஐயமில்லை

பொ. நா நல்லையா L. T
தலைவர்
யாழ். இந்துக் கல்லூரி
ஆசிரிய சழகம்

# இப்படியும் நடக்கிறது

ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரைக்கும் வாடி இருக்குமாம் (அதாவது எதிர்பார்த்து இருக்குமாம் என்றும் சொல்லலாம்) கொக்கு

பின்னர் என்ன நடந்தது?

கொக்கின் நிலையைப் புரிந்து கொண்டமீன் பதுங்கி விட்டதாம் பாவம் கொக்கு! மீனை விழுங்க நினைத்து, திட்டம் பலிக்காமலேயே அது செத்துப் போயிற்று! ஆனல் மீன்?

செத்துப்போன கொக்கைப் பார்த்து ஏளனம் செய்து மெல்லத் தொட்டுப் பார்த்து சுவைத்துச்சென்றதாம்!

இது ஒரு புதுக்கதை

ஊடுருவி'

## இலங்கை ..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பி. ரி. ஐ ஊழியர்சங்க சம்மேளனம். டில்லி பத்திரிகையாளர் சங்கம் மற்றும் அகில இந்திய செய்திப் பத்திரிகையாளர் மாநாடு போன்றவையும் பி, ரி ஐ நிருபரின் கைது குறித்து கவலை தெரிவித்துள்ளது. (து)

## பிரதமர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''கடந்த இரண்டுவார காலமாக வடபகுதியில் இராணுவத்தினர் கொலை, கொள்ளை, சூறையாடல், கற்பழிப்பு போன்ற பல்வேறு கொடூர நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் அவர்கள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் தமிழ் மக்கள்மீது மேற்கொண்டு வருகின்றார்கள்''.



STOP பிறேக் ஒயில்
எம்மிடம் மொத்த
வியாபாரத்துக்கும் உண்டு.
வர்த்தகர்கள் விஷேட சலுகைக்கு
தொடர்புகொள்ளவும்.
ட்றேட் சென்டர்,
HOME FINANCE Ltd.
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
3021


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திரு. கதிரவேலு மார்க்கண்டு

(மருதானை வர்த்தகர்) புங்குடுதீவு 12

மலர்வு: 24-05-1923 உதிர்வு: 15-04-1985



அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை சித்திரை மாதம் 31-ம் திகதி (13-05-1985) திங்கட்கிழமை காலை புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில்தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிரியை 15-5-85 புதன் கிழமை காலை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குடும்ப ஒளிவிளக்காய், அன்பு தருவுருவாய் பண்பின் சிகரமாய், அறிவின்சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய் சமூகத்தின் மத்தியில் நன்மதிப்புப்பெற்ற எம்குலவிளக்கே எம்மை விட்டு நாம் தாங்கமுடியாத ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென மீளாத்துயில் கொண்ட ..., உங்கள் ஆத்ம சாந்திக்க கப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி: மா. புனிதவதி பிள்ளைகள்: ஏ கிலாவதி, மா சச்சிதானந்தன், மா சதானந்தன், மா. தயானந்தன், மருமகன்: சி. ஏகாம்பரநாதன் சுவிஸ், பேரன்: ஏ. விநோத, பெருமகள்: இ வசந்தி.

3238

## வல்வைச் சம்பவம்;
# ஜனாதிபதிக்கு தமிழ்ப்பகுதி
## பிரஜைகள் இணைப்புக்குழு தந்தி

(யாழ்ப் ாணம்)

வல்வெட்டித்துறையில் நிலைமை மோசமாகியுள்ளதால், அப்பாவி மக்களின் உயிரையும். உடமைகளையும் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு தமிழ்ப்பகுதி பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு தந்தியொன்றை அனுப்பியுள்ளது.

சகடும் ஆட்சேபம் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ள அத் தந்தியில், அப்பாவிமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் சிலர் வரிசையாக நிறுத்தப்பட்டு சுடப்பட்டதாகவும், சிலர் வீட்டுக்குள்வைத்து குண்டினால் தகர்க்கப்பட்டதாகவும், மற்றும் சிலர் பகிரங்கமாக சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய வியாபாரச்சங்கக் கொள்ளை:
# காங்கேசன்துறையிலும் கடையடைப்பு ஆட்சேபம்

(மாவிட்டபுரம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க களஞ்சிய கொள்ளையைக் கண்டித்து மேற்படி சங்க காங்கேசன்துறைக்கிளை ஊழியர்களும், கடையடைப்பும், மறியல் போராட்டமும் மேற்கொண்டனர்.

மேற்படி கிளையில் பணிபுரியும் ஊழியர்கள் இன்று முழு நேர கடையடைப்புச் செய்து இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் சொத்துக்களைக் கொள்ளையடிக்காதீர். 175 ஏழைத்தொழிலாளிகளை நடுத்தெருவில் விடாதீர், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களைத் திருப்பித்தாருங்கள், மனிதாபிமான முறையில் ஏழைத்தொழிலாளர்களுக்கு வாழ்வளியுங்கள் என்னும் சுலோகங்களைத் தாங்கியவண்ணம் அவர்கள் இம்மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# எரிபொருள் 'பவுஸர்' இடையில் நிற்கிறதாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரவேண்டிய எரிபொருள்கள் நிரப்பப்பட்ட பௌஸர்கள் கிளிநொச்சியில் பாதுகாப்பான ஓரிடத்தில் முடங்கிக்கிடப்பதாகக் கூறப்படுகிறது.

பவுஸர்களை யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்குப் பாதுகாப்புவசதி மறுக்கப்பட்டதே முடங்கிக்கிடப்பதற்குக் காரணமாம்.

யாழ். மாவட்டத்தில் எரிபொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது தெரிந்ததே. [மா]

## உலக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆத்திரப்படுத்திவிட்டது. ஹிட்லரின் கொடுமைகளை வெறுத்திருந்த மறந்திருந்த இன்றைய ஜெர்மன் சமுதாயத்துக்கும் அதுபெரும் கசப்பாயிருந்தது. பெரும் சிக்கலுக்குள் அகப்பட்ட ஜனாதிபதி காரியத்தில் கண்ணாயிருந்தார்

இந்த தோல்வியைச் சமாளித்து ஜெர்மனி ஒன்றுபடவேண்டும் ஏன் ஐரோப்பாவே ஒற்றுமைப்படவேண்டுமென்று பேசியிருக்கிறார். அப்பேச்சு அவ்வளவு எடுபடவில்லை.

இந்த விழாவிற்கு வியட்நா போர் முடிவடைந்த பத்தாம் ஆண்டுக் கொண்டாட்டம் நடத்திய வியட்நாம் றீகனுக்கும் அமெரிக்க மக்களுக்கும் ஒருபெரும் தோல்வியை நினைவூட்டியது. ஆனால் வியட்நாம் இன்று அமெரிக்காவுடன் நட்பறவு தொடர ஆயத்தமாயிருக்கிறது. றீகனுக்குத் தர்ம சங்கடமென்பது புலனாகிறது.

## சோவியத்யூனியன்

மாஸ்கோவும், கிழக்கு ஜெர்மனியும் இரண்டாவது யுத்தம் முடிந்த நாற்பதாம் ஆண்டு விழாவை மிக விமரிசையாகக் கொண்டாடினர். எந்தவகையிலும் நாஸிசப் போன்ற ஏகாதிபத்தியக் கெடுபிடி உலகில் தலையெடுப்பதைத் தடுக்க என்றும் தயாரென்ற முழக்கம் கொண்டாட்டத்தின் பெரு நிகழ்ச்சியாயிற்று.

## மாஸ்கோ

அண்மையில் பொன்னில் ஏழுநாடுகள் பொருளாதார உச்சி மாநாட்டை நடத்திய பின், றீகன் தலைமையில் அந்நாடுகளின் தலைவர்கள் கடந்த உலக யுத்தத்தில் நாஸி எஸ். எஸ். குண்டர்களின் கொடுமைகளை நியாயப்படுத்தி அவர்களுக்கு மரியாதை செலுத்தியதாக ரஷ்ய தலைவர் கொர்பசசேவ் கூறியிருக்கிறார்.

மனித குலத்தை பேராபத்தின் விளிம்புக்கு அமெரிக்கா இட்டுச் செல்கின்றதென்று கூறிய கொர்பச்சேவ, சோவியத் யூனியன் இராணுவபலம் அமெரிக்காவிற்கு என்று குறைந்திருக்காதென்று கர்ச்சித்தார்.

இருப்பினும் இரண்டு வல்லரசுகளும் இன்றைய அழிவு நிலையை அவதானித்து நாஸிசத்தை ஒழிக்க உருவான கடந்தகால ஒற்றுமையை மீண்டும் வளர்க்க விருப்பமென்று ஒருவருக்கொருவர் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

## ஆசியா

இவ்விரு உலகத்தலைவர்கள் இந்தியாவின் இளந்தலைவர் இந்தியப்பிரதமரை தங்கள் தங்கள் பக்கம் வளைக்க பெருமுயற்சி செய்கின்றனர், முதல் மாஸ்கோவுக்கும் பின்பு வாஷிங்டனுக்கு செல்லவிருக்கும் ரஜீவ்காந்திக்கு மிகப்பெரும் வரவேற்பும் கௌரவமும் அளிக்க இவ்விருதலைநகரங்களிலும் ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. தொழில் நுட்ப, வர்த்தக, ராணுவ உதவிகள் ஏராளம் கிடைக்கவிருக்கின்றன. நடுநிலைமையில் நின்று இவற்றைப் பயன் படுத்துவதோடு அணிசேராக் கொள்கையைப் பறப்படுத்தி ஆசியாவில் அரசியல் ராணுவ சமபலத்தை இந்தியா ஏற்படுத்த முடியுமா? பாகிஸ்தானின் இராணுவ குவிப்பை எதிர்க்கும் அதே வேளையில் இவ்விரு காதலிகளைத் திருப்திப்படுத்தும் தந்திரம் இளந்தலைவர் ராஜீவுக்கு உண்டா?

"உலகம் சுற்றி"

## வல்வைச் சம்பவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் 'எக்ஸ்ரே' படத்தையும் அவர் சமர்ப்பித்தார்

### 12 இளைஞர்கள் மட்டுமே

25 இளைஞர்கள் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர் என்று பிரஜைகள் குழுவினர் தெரிவித்தபோது, 12 இளைஞர்கள் மட்டும்தான் முகாமில் இருப்பதாக தெரிவித்த பிரிகேடியர், பெனடிகற் வீரசிங்கம், சுப்பிரமணியம் சுரேந்திரா, றேமார் றஜி, மாணிக்கம் நவரத்தினம், சரவணை ரவீந்திரன் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டார் மற்ற ஏழு பேரின் பெயரும் பின்னர் அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### இறந்தவர் பட்டியல்

பீதியினால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஓடி ஒளிந்து விட்டதால் கொலையுண்டவர்களின் பெயர் பட்டியலைத் தயாரிக்க முடியவில்லை என்றும் அடுத்த வாரம் இப்பட்டியலைத் தாம் சமர்ப்பிப்பதாகவும் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டதாகவும். அவர்களிடமிருந்து நகைகள் பறித்து எடுக்கப்பட்டதாகவும் குழுவினர் பிரிகேடியரிடம் தெரிவித்தனர்.

முன்பெல்லாம் வல்வெட்டித்துறையில் பதற்றமென்றால் மக்கள் உடுப்பிட்டிக்கு ஓடுவார்களென்றும் உடுப்பிட்டியில் பதற்றமென்றால் வல்வெட்டித்துறைக்கு ஓடுவார்களென்றும். ஆனால் தற்போது எங்கும் பதற்றம் இருப்பதால் மக்கள் ஒதுங்குவதற்கு இடமில்லாமல் தவிக்கிறார்களென்றும் குழுவினர் தெரிவித்தனர்.

இதுமாதிரிக் கொலைகள் முன்னெப்பொழுதும் வடக்கில் நடைபெறவில்லை என்றும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்காவிடில் தாய்மாரை இனிமேல் கட்டுப்படுத்துவது கஷ்டமாயிருக்கும் என்றும் தெரிவித்த குழுவினர். தற்போது 14 வயதிற்கும் 17 வயதிற்குமிடைப்பட்ட மாணவர்களே கொலைசெய்யப்பட்டுள்ளதாகவும்' இப்படிச் சிறுபிள்ளைகளைக் கூட வீட்டில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

முகாம்களில் மரண பீதியை ஏற்படுத்தும் வகையில் வெடிகுண்டுகளை வெடிக்கவைத்து, ஏற்கெனவே ஏங்கித் தவித்து இருந்த இடம்விட்டு ஓடி ஒளித்திருக்கும் மக்களை மேலும் பீதியடையச் செய்யவேண்டாம் என்றும் குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

பெண்களின் நகைகளைப் பறித்தெடுத்ததுபற்றி விசாரணையொன்று நடைபெற்றால் பாதிக்கப்பட்ட பெண்களையே கூட்டிவந்து சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர். (க)

## வீடுகள் தீக்கிரை

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் இரணைமடுக் குளப்பகுதியில் பல வீடுகள் நேற்று தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிகிறது

இப்பகுதியில் குண்டு வெடிச் சத்தங்களும் கேட்டதாகக் கூறப்படுகிறது. [மா]

## கிளிநொச்சி மாவட்டம்
# க. பொ. த. பரீட்சை ஆகஸ்டில் நடக்கும்
## கல்விப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தவிர்க்கமுடியாத காரணங்களினால நடத்தப்படாமல் இருந்த க. பொ. த பரீட்சை மீண்டும் 1985 ஆகஸ்ட் 9-ம், 10-ம திகதிகளில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம், எம். மன்சூர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் 1984 க. பொ. த. சாதாரண பரீட்சை மீண்டும் 1985 மார்ச் மாதம் நடைபெற்றபொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பூநகரிப் பரீட்சை நிலையங்கள் இரண்டைத் தவிர ஏனைய 15 நிலையங்களில் நடாத்தப்படாதது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரும், பிரஜைகள் குழுவினரும் எடுத்த தீவிர முயற்சியின்பேரில், கல்விச் செயலாளர் மீண்டும் பரீட்சை நடாத்த உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

# "யாழ்நகரில் கடையடைப்பு பூரண வெற்றி"

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் கடையடைப்பு எதிர்பார்த்ததிலும் பார்க்க வெற்றியளித்துள்ளது" என்று யாழ். வர்த்தகசங்கச் செயலாளர் திரு. சி நயசிவாயம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் வர்த்தகர்கள் நூற்றுக்குநூறுவீதம் கடைகளைப் பூட்டி தமது கோரிக்கை நிறைவேறும்வரை கடைகளைப் பூட்டி எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு வர்த்தகர்களைக் கேட்டுக் கொள்வதாகவும் கூறப்பட்டுள்ளது.

யாழ். வர்த்தகர்சங்கத் தலைவர் திரு. எஸ். வி. முருகேசுவை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு விற்பனைப் பிரதிநிதிகள் சார்பில் திரு. வி. ராமேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். ஊழியர் சிப்பந்திகள் சங்க செயலாளர் திரு. சோ. சிவபாதசுந்தரம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

வர்த்தகர் திரு. எஸ். வி. முருகேசுவை விசாரணை என்று கூறி அழைத்துச் சென்றவர்கள் உடனடியாக அவரை விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

அவரது சேவை என்றும் எமது மக்களுக்குத் தேவை இனிமேலும் இப்படியான கடத்தல் நாடகங்களை எவராக இருந்தாலும் செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம். வர்த்தகர்களைக் கடத்திச் செலவதால் ஊழியர்கள் நடுத்தெருவில் நிற்கும் நிலை ஏற்படும். (க)

## லொறி கடத்தப்பட்டது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான லொறியொன்று சித்தன்கேணி சந்திக்குச் சமீபமாக வைத்து இனம் தெரியாத இளைஞர்களால் கடத்தப்பட்டுள்ளது.

கடைகளுக்கு விநியோகிக்கப்படுவதற்காக பாண் ஏற்றிச் சென்ற சங்க லொறியே நேற்றுக் காலை மேற்படி கடத்திச் செல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கதிர்காமத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தும் அது பலனளிக்க வில்லையாம்.

இந்நிலையில் பலாத்காரமான முறையில் புனித சூலத்தையும் எடுத்துக்கொண்டு அந்நபர் கூரையின்மீது ஏறிக்கொண்டாராம். அவருடன் வந்திருந்த வெளிநாட்டு நண்பர் எவ்வளவோ கூறியும் கேட்காத நிலையில் கோவில் நிருவாகத்தினரால் பொலிசார் வரவழைக்கப்பட்டனராம். பின்பு அந்நபர் கீழே இறக்கப்பட்டு விசாரணைக்காக பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டார். (ரா)

## யாழ்தேவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுகள் 'யாழ். ஸ்ரேடியத்தில்' வைத்தே வழங்கப்படும் என்று ரயில்வே பகுதியினர் தெரிவித்தனர்

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே 'யாழ் ஸ்ரேடியம்' ஏற்பாடு செய்யப்படுவதாக அறியப்படுகிறது.

கடந்த இருதினங்களும் 'யாழ்தேவி' யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை. இன்று எதுவரை மட்டும் வரும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. (க)

## தெற்காசியப் பிராந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரல் ஷியாவுல் ஹக்கும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு இம்மாநாட்டில் இலங்கை கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

இதுதவிர மாநாட்டில் கலந்து கொள்ளும் வெளி விவகார அமைச்சர்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் சாஹுல் ஹமீத்துடன் தொடர்பு கொண்டு இலங்கை இம்மாநாட்டில் கலந்து கொள்வதின் அவசியத்தைத் தெளிவுபடுத்தியுள்ளனர். பூட்டான் மன்னரும் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்தனவுக்கு இதுபற்றி விசேஷ செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இவைகளைத் தொடர்ந்தே இம்மாநட்டில் கலந்துகொள்ள இலங்கை இணங்கியதாக தெரிவிக்கப்பட்டது. (ரா)

## இருவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயராணி (வயது 16) படுகாயத்துடனும் சங்கத்தானையைச் சேர்ந்த ஜெயராஜா 38வயது) காலில் காயத்துடனும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 62-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126